Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Issue - 1, November 2021 E-ISSN: 2583-0481

# The Aspects of Impermanence in Kalitthogai (Palaikkali)

**M. Chitra Manogari**, Research Scholar, Sangappalagai for Tamil Development, University of Madras, Chennai – 05
ORCiD: https://orcid.org/0000-0001-5586-551X
**DOI: 10.5281/zenodo.5735191**
**Received** 16 July 2021; **Revised form** 13 September 2021; **Accepted** 26 October 2021; **Available online** 26 November 2021

## Abstract

*Literature reveals the norms of life required not only for an individual but also for the society surrounding him/her. The Sangam Literature that is considered the most ancient literature of the Tamil Community contains various teachings on the right ways of life. In Sangam literature, my research focuses on Kalitthogai, which records the secular life of Tamil ancestors, who lived 2000 years ago. Within Kalitthogai, Palaikkali contains in abundance, the profound and valuable insights of good-hearted people. In Palaikkali, Perungadungo has put into song, beneficial ideas which society can apply for a purposeful living. My research seeks to highlight the valuable insights given in Palakkali about the impermanence of certain aspects of life and discusses them in detail.*

**Keywords:** Impermanence, Wealth, Youth, Soul, Time and Life.

## References

[1] Ramasubiramaniyam V. T., Manimekalai, Poompukar Pathippagam, Chennai-08, 2010.
[2] Subramaniyan Sa. Ve., Pathineen Keezhkkanakku Noolkal, Manivasagar Pathippagam, Chennai - 08, 2017.
[1] Subramaniyan Sa. Ve., Tholkappiyam Vilakavurai, Meyyappan Padhipagam, Sidhamparam, 2015.
[2] Gyanasampanthan A. S., Thirumanthiram, Kangai Puththaga Nilaiyam, Chennai - 17.
[3] Puliyoorkesigan, Kaliththogai, Kangai Puththaga Nilaiyam, Chennai - 17, 2010.
[4] Meiyyappan S., Thirukural Parimelazagar urai, Manivasagar Pathippagam, Chennai - 08, 2017.
[5] Visuvanathan A., Kaliththogai, New Century Book House, Chennai - 98, 2014.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, இதழ் - 1, கார்த்திகை 2052 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# கலித்தொகைக் கூறும் நிலையாமை (பாலைக்கலி)

**மூ. சித்ரா மனோகரி**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 05
ORCiD: https://orcid.org/0000-0001-5586-551X
**DOI: 10.5281/zenodo.5335931**

**ஆய்வுச் சுருக்கம்**

*இக்கட்டுரை வாழ்வின் நிலையாமைக் குறித்த கருத்துக்களைப் பதிவுச் செய்கிறது. அற இலக்கியங்களும் புற இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் மட்டுமே சொல்லிச் செல்லும் நிலையாமைத் தத்துவத்தை 'அக இலக்கிய'மான கலித்தொகையின் வாயிலாக வெளிப்படுத்திச் செல்கிறது இக்கட்டுரை. செல்வம், இளமை, யாக்கை, உயிர் மற்றும் காலம் போன்றவற்றை, நிலைத்ததாக மனிதன் எண்ணும் நிலையில்லாதவனவற்றைக் காதல் வாழ்வைப் பதிவு செய்யும் இலக்கியமான கலித்தொகை (பாலைக்கலி)-யில் இடம்பெறும் செய்திகளைக் கூறுகிறது இவ்வாய்வுக்கட்டுரை. அற இலக்கியங்களின் துணைக்கொண்டு கலித்தொகையில் இடம்பெறுகின்ற நிலையாமைத் தகவல்களைச் செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை மற்றும் காலம் நிலையாமை என்னும் தலைப்புகளின் கீழ் வாழ்வின் உயரியச் சிந்தனைகளை இக்கட்டுரையானதுவிளக்குகிறது. நீர்குமிழ் போன்ற நிலைத்த புகழைச் சேர்த்து வாழ்வாங்கு வாழ இக்கட்டுரையும் ஒரு சிறுத்துளி உதவும் விதமாக அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** கலித்தொகை, பாலைக்கலி, நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, காலம் நிலையாமை.

## முன்னுரை

இலக்கியங்கள் தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் அவனைச் சார்ந்த சமூகத்துக்கும் தேவையான வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றன. தமிழ்ச் சமூகத்தின் மிகத்தொன்மையான இலக்கியங்களாகக் கருதப்படும் சங்க இலக்கியங்கள் பல்வேறு வாழ்வியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் உலகியல் வாழ்க்கைப் பற்றிய உண்மைப் பதிவேடே

கலித்தொகை. நல்ல எண்ணம் கொண்டவர்கள் தம் ஆழ்ந்த சிந்தனையில் கண்டு எடுத்த மாணிக்கம் போன்ற கருத்துகள் பாலைக்கலியில் கொட்டிக்கிடக்கின்றன. மனித சமூதாயம் பயனுற்று வாழ பாலைக்கலியில் பெருங்கடுங்கோ பாடிச்சென்ற வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்ந்து வெளிப்படுத்த இக்கட்டுரை முற்படுகிறது.

**கலித்தொகை**

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்**
**உரியதாகும் என்மனார் புலவர்** (தொல்காப்பியம், அகத்திணையியல், நூ: 53)

என்ற தொல்காப்பியனாரின் கூற்றுக்கினங்க செய்யுள் அமைப்பால் பெயர் பெற்ற இரண்டு எட்டுத்தொகை நூல்களுல் ஒன்று கலித்தொகை. கலிப்பாடல், பலவகைப்படும். கலித்தொகையில் பெரும்பான்மையான பாடல்கள் ஒத்தாழிசைக் கலிப்பாவால் பாடப்பெற்றுள்ளன. கலித்தொகைப் பாடல்கள் 11 அடிகள் முதல் 80 அடிகள் வரை ஐந்து புலவர்களால், ஐந்து திணைகளில் வைத்து பாடப்பெற்ற ஓர் ஒப்பற்ற அக இலக்கியம் ஆகும். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றித் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றிய காதல் ஓவியமே கலித்தொகை. கலித்தொகையில் பாலைக்கலிப் பாடல்களைப் பாடியவர் ‘பாலை பாடிய பெருங்கடுங்கோ’. கலித்தொகையில் மிகுதியாக தோழிக்கூற்றாக அமைந்த 66 பாடல்கள் காணப்படுகின்றன. அதில் பாலைக்கலியில் இடம்பெற்ற 35 பாடல்களில் 28 பாடல்கள் தோழிக்கூற்றாக அமைந்துள்ளது. அப்பாலைக்கலியில் காணப்படும் நிலையாமைக் கருத்துக்கள் பற்றி இனிக் காண்போம்.

**நிலையாமை**

**பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றாமை**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே** (தொல்காப்பியம்,புறத்திணையியல், நூ: 18)

உலகப் பொது நிலையாமையைக் கூறும் விழுமிய நோக்குடன் படைக்கப்பட்ட தொல்காப்பியம் சுட்டும் இக்கருத்து முதலில் உற்றுநோக்கத்தக்கது. தொல்காப்பியர் புறத்திணையில் சுட்டிக்காட்டும் காஞ்சித் திணையும் நிலையில்லா உலக வாழ்வியலைக் கோடிட்டுக்காட்டிச் செல்கிறது. உயிரைக் கொண்டு இயங்குகின்ற

உடலாலோ, செல்வங்களாலோ, இளமைத் துடிப்பாலோ நாம் பிறருக்கு செய்யும் நன்மை தீமைகளைப் பொருத்தே நம் வாழ்வும் அமையும் என்பதை,

**நீள்இரு முந்நீர் வளிகலன் வெளவலின்**
**ஆள்வினைக்கு அழிந்தோர்** (கலித்தொகை, பாலைக்கலி, பா 5: 6-7)

கலித்தொகைக் கூறும் இவ்வடிகள் மூலம் அறியலாம். இக்கூற்றுக்கு வலிமைச் சேர்க்கும் விதமாக புறநானூறு கூறும் கீழ்க்காணும் இவ்வடிகளும் எண்ணத்தக்கது.

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்** (புறநானூறு, பா195: 6-7)

வள்ளுவரின் வாக்குபடி நிலையில்லாதவனவற்றை நிலை என எண்ணாது வாழ்வில் துன்பங்களற்று வாழ,

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை** (திருக்குறள், 331)

இக்குறளைக் கடைப்பிடிப்போம். மேலும் செல்வம் நிலையானது என்ற மயக்கத்தில் வாழ்வதைவிடுத்து புறநானூற்றின், **"செல்வத்துப் பயனே ஈதல்"** (புறநானூறு, பாடல் 189-7) இவ்வடிக் கூறும் உண்மை வழி செல்தல் வேண்டும்.

**செல்வம்நிலையாமை**

திருவிழா நாளில் கோலாகலம் பூண்டிருக்கும் இடமானது அவ்விழா நிறைவுற்றப் பிறகு அவ்விடத்தின் தோற்றத்தைப் போன்று, செல்வம் நிறைந்திருக்கும் போது கூடியிருக்கும் சுற்றங்கள், வறுமையுற்ற தருணத்தில் நம்மை விட்டு அகன்றுவிடும் என்று செல்வம் நிலையில்லாத தன்மையுடையது என்பதை நமக்கு கீழ்க்காணும் பாலைக்கலியின் அடிகள் உணர்த்தும்.

**கல்லெனக் கவின்பெற்ற விழவுஆற்றப் படுத்தபின்**
**புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு** (கலித்தொகை, பா 5: 10-11)

செல்வம் ஒரு நிலையில்லாத பொருள். அச்செல்வம் வந்து சேரும் போது, அதுச் சேர்ந்தாரைப் பெரிதும் இன்புறச் செய்யும், அதுப்போகும் போது அதைக் கொண்டவரை தம்மளவில் மட்டும் அல்லாது பிறரால் இகழ்ந்து பேசும் துன்பத்தையும் கொடுத்துச் செல்லும். இச்செல்வமானது அடிக்கடிக் கைமாறிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட செல்வம் சேருங்கால் பிறருக்கு உதவி, நிலைத்த புகழைச் சேர்த்தல்

வேண்டும் என்பதைக் கூறும் **கலித்தொகை பாடல் 8: 15-17** அடிகள் இங்கு சிந்திக்கத்தக்கது. **“கைக்குக்கை மாறும் பணமே”** என்ற திரையிசைப்பாடலும் எளிமையாக இக்கருத்தை உணர்த்துகிறது.

**செல்வர் யாம்! என்று தாம் செல்வுழி எண்ணாத**

**புல்லறிவாளர் பெருஞ் செல்வம், எல்லில்**

**கருங் கொண்மூ வாய் திறந்த மின்னுப்போலதோன்றி,**

**மருங்கு அறக் கெட்டுவிடும்.** (நாலடியார், பா: 8)

நம்மிடம் செல்வம் இருக்கிறது என்ற கர்வத்துடன் யாருக்கும் பகிராது வாழ்வோமானால், அம்மிகுந்த செல்வமானது மேகங்கள் வாய் திறக்க, அதில் தோன்றி மறையும் மின்னலைப் போன்று இருந்த இடம் தெரியாமல் செல்வம் அழிந்துவிடும் என்ற நிலைத்த கருத்தை நாலடியார் வழி உணரலாம். பிறர் கண்முன் சிறப்பாகத் தோன்றும் பொருள்ச் செல்வமானது, அது தோற்றுவிக்கும் மாய பிம்பத்தைப் பெரிது என எண்ணி, பொருள் உடையவனே உண்மையான செல்வம் உடையவன் என்ற எண்ணத்தையும் கொண்டு, நாம் சேர்க்கும் செல்வமானது இம்மைக்கும் மறுமைக்குமே பகையாகத்தான் விளங்கும் என்ற உண்மையை விளக்கும் கலித்தொகையின் பாடல் அடிகள் சிறப்பானவையே.

**பொருள் அல்லால் பொருளும்உண்டோ?**

**செம்மையின் இகந்துஒரீஇப் பொருள் செய்வார்க்கு, அப்பொருள்**

**இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயே?**

(கலித்தொகை, பா 14:10, 14-15)

**தோற்றம்சால் தொகுபொருள் முயறிமன்** (கலித்தொகை, பா 17:10)

செல்வமானது, தனக்கு உரிமையுடையவர் இவர்தாம் என்று யாரிடமும் நிலைத்து நில்லாது, அவரவர்க்குரிய நல்வினைகளையொட்டியே போவதும் வருவதுமாக இருக்கும் இயல்பினையுடையது என்ற பேருண்மையை விளக்கும் பாலைக்கலியின் வரிகள்,

**‘கிழவர் இன்னோரர’; என்னாது, பொருள்தான்,**

**பழவினை மருங்கின், பெயர்புபெயர்பு உறையும்;**

**அன்ன பொருள்வயின் பிரிவோய்...** (கலித்தொகை, பா 21:10-12)

செல்வம் உடையவராக ஒருவர் வாழும்போது, அவரோடு சேர்ந்து பழகி, அவர் செல்வங்களை எல்லாம் தானும் அனுபவித்து, பின்பு அவருடைய வறுமையான காலத்தில் அவரை ஏறிட்டும் பார்க்காத உணர்வினை உடையவர்கள் வாழும் உலகியல் நிலையைக் கூறும் அடிகள்,

**செல்வத்துள் சேர்ந்துஅவர் வளன் உண்டு, மற்றவர்**

**ஓல்கிடத்து உலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்** (கலித்தொகை, பா 25: 19-20) இவ்வாறெல்லாம் பாலைக்கலியில் செல்வம் நிலையில்லாதது என்பதை உணர்த்தும் பாடல்அடிகளைப் பார்க்கும் போது வள்ளுவரின், நிலைத்து நிற்காத செல்வம், அதனை ஒருவன் பெற்றுவிட்டால், அது நிலைத்துநிற்பதற்கான அறச்செயல்களை அப்போதே செய்ய வேண்டும் என்ற மேலான சிந்தனைக் கூறும் குறள்,

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்.** (திருக்குறள்: 333)

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் செல்வம் நிலையாமைக் குறித்து அவர் கூறிய, உலக வாழ்வில் நல்வழிக்குப் பயன்படுத்தாமல் சேர்த்து வைத்து செல்வத்தை மறுமை வாழ்வுக்கு எடுத்து செல்லமுடியாது என்பதைக் காட்டும் **திருமந்திரம் பாடல் 215** உற்றுநோக்கத்தக்கது.

**இளமைநிலையாமை**

பகல் நேரத்தில் அழகின் அற்புதமாக காட்சியளித்த ஒரு தாமரைத் தடாகமானது, இரவோடிரவாக அதில் உள்ள நீரெல்லாம் வற்றிவிட்டால், அடுத்த நாள் பொழுது அத்தடாகத்தின் தோற்றம் எவ்வாறு சீர்மை இழந்து காட்சியளிக்குமோ, அதேபோன்றதே நம் இளமையும் சில ஆண்டுகளுக்குப் பின்பு பொழிவு இழந்து முதுமைத் தோற்றத்தில் காட்சியளிக்கும். இவ்வற்புதமான கருத்தை மையப்படுத்திய கலித்தொகையின் பாடல்வரி,

**ஓர்இரா வைகலுள், தாமரைப் பொய்கையுள்**

**நீர்நீத்த மலர்போல,...** (கலித்தொகை, பா 5:14-15)

முழுநிலவு தேய்ந்தால் மீண்டும் வளர்வதைப் போன்று இளமையானது குன்றினால் மீண்டும் வளமைப் பெறாது என்பதை, அரும்பானது மலர்ந்து, பூவாகிப் பின்பு வாடி வீழ்வதைப் போல, இளமையும் அரும்பி, மலர்ந்து, மூப்பெய்தி உதிர்ந்து விடும் என்கின்றது கலித்தொகையின் பாடல் வரிகள்,

**தகைவண்டு புதிதுண்ணத் தாவிதழ் தண்போதின்**
**முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ**

(கலித்தொகை, பா 17:15-16)

இன்பங்கள் பலவற்றையும் விற்று நாம் தேடித்திரிந்து சேர்த்த செல்வத்தால் நாம் இழந்த இளமையை ஒருபோதும் மீட்டுத்தரவியலாது என்ற உண்மையை உணர்ந்து இளமையிலே நல்லவனவற்றைச் செய்து நற்புகழ் பெற வேண்டும் என்பதைக் கீழ்காணும் கலித்தொகையின் கூற்று நமக்கு உரைக்கும்,

**பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ**
**செயலையம் தளிர் ஏய்க்கும் எழில் நலம்** (கலித்தொகை, பாடல் 15:11-12)

நல்ல மணமிக்க முல்லையின் அரும்புகளை ஒன்றாக கோர்த்தால் போன்ற, நிறத்தாலும் வரிசை அமைப்பாலும் முல்லையை ஒத்த பல்வரிசை ஒழுங்கைப் பார்த்தே புகழ்ந்து பாராட்டுவரே அன்றி, மூப்பால் முதிர்ந்து, பற்கள் வீழ்ந்த தளர்வுற்ற நிலையைச் சுட்டிப் பாராட்டுவதில்லை என்ற கருத்தமைந்த **கலித்தொகையின் பாடல் 22 அடிகள்** இளமையின் நிலையற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.

**பருவம் எனைத்து உள? பல்லின் பால் ஏனை?**
**இரு சிகையும் உண்டீரோ, என்று, வரிசையால்**
**உள்நாட்டம் கொள்ளப்படுதலால், யாக்கைக் கோள்**
**எண்ணார், அறிவுடையார்** (நாலடியார், பா. 18)

இளமை எங்கே?, பற்கள் என்னவாயின?, உணவை மென்று உண்ண முடிகிறதா? என்றெல்லாம், பருவம் முதிர்ந்த வயதானவர் நிலையைக் கேட்டறிந்தால், இளமையின் உடல் வலிமையானது என்று அறிவுடையோர் நினைக்கமாட்டார்கள், என்னும் அற்புதமான இளமையின் நிலையாமையை எடுத்துரைக்கும் நாலடியாரின் கருத்துகள் இங்கே போற்றத்தக்கன. ஆற்றுநீர் கழிந்து ஓடிக் கடலோடுக் கலப்பது போன்று இந்த இளமையும் நீங்கி உயிரானது பரம்பொருளோடு கலந்துவிடுவதை உரைக்கும் வரிகள், **“யாறுநீர், கழிந்தன்ன இளமை...”** (கலித்தொகை, பாடல் 20:13) இவற்றையெல்லாம் படித்தறியும் போது இளமை என்பது மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்வின் பாதையை நிர்ணயம் செய்யும் பருவம். மனிதனின் இளமை அழியும் நிலைக்கொண்டது என திருமூலர் கூற்றுப்படியும் அறியலாம்.

**உயிர் நிலையாமை**

**கலித்தொகையில் பாடல் 9-ல்** உயிர் நிலையாமையை ஆசிரியர் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். இக்கருத்துக்கு அரணாக நாலடியார் கூறுவது, உயிரோடு வாழும் காலத்தை அளவிடும் கருவியாய் ஞாயிரு விளங்குவதால் உங்களுடைய வாழ்நாள் குறைவதை உணர்ந்து, அது கெடுவதற்கு முன்பு பிறருக்கு உதவுங்கள் என்னும் செய்திச் சிறப்பானது.

**வாழ்நாட்கு அலகா, வயங்கு ஒளி மண்டிலம்**
**வீழ் நாள் படாஅது எழுதலால், வாழ்நாள்**

**உலவாமுன் ஒப்பரவு ஆற்றுமின், யாரும்**

**நிலவார், நிலமிசை மேல்.** (நாலடியார், பா. 22)

நல்ல மணம் வீசக்கூடிய சந்தனமானது, அதைப் பூசிக்கொள்பவர்கே உபயோகப்படுவதைப் போன்று, அது பிறந்த மலைக்கு அதனால் எப்பயனும் இல்லை; அதுபோல முத்துக்களால் கோர்க்கப்பட்ட அழகிய மணிமாலையானது அணிபவர்கே பயன்தரும், அது பிறந்த கடலுக்கு அதனால் பயன் ஒன்றும் விளைவதில்லை; அதே போன்று, யாழில் இருந்து தோன்றும் இனிய இசையானது அதைக் கேட்பவர்கே இன்பந்தரும், அது பிறந்த யாழுக்கு அதனால் பயனேதும் இல்லை என்பது திண்ணம். இது போன்றதே உடலில் தோன்றிய உயிரானது அவ்வுடலில் நிலையாக இல்லாமல் பிரிந்து சென்றுவிடும் என்பதை இப்பாடல் மூலம் உணர்கிறோம். இப்பாடலை உற்றுநோக்கும் போது வள்ளுவரின்,

**குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே**

**உடம்பொடு உயிரிடை நட்பு.** (திருக்குறள்: 338)

தான் தங்கியிருந்த கூடானது தனித்து இருக்க, அதை விட்டு பறந்து வெளியேறிய பறவையைப் போல், உயிரானது உடலைவிட்டுச் சென்றுவிடும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது இக்குறள்.

**தழைக்கின்ற செந்தளிர் தண்மலர்க் கொம்பில்**

**இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்** (திருமந்திரம், முதல் தந்திரம், பாடல் : 187) பல கிளைகளைக் கொண்ட மரத்திலிருந்து பழுப்புற்ற இலையானது உதிர்ந்து வீழ்வது போல, பல உறுப்புகளைக் கொண்ட உடலைவிட்டு உயிர் பிரிந்துவிடும் எனக்கூறுகிறார் திருமூலர்.

**காலம் நிலையாமை**

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்**

**வாளது உணர்வார்ப் பெறின்.** (திருக்குறள்: 334)

வாழ்க்கையை ஆராய்ந்து உண்மையை நாம் உணர்வோமானால் 'நாள்' என்பது ஒரு கால அளவாக கொண்டு, உயிரை அறுக்கும் வாள் என்பது விளங்கும் என்கிறார் வள்ளுவர். கலித்தொகையில் காலம் கரையும் தன்மைக் கொண்டது, அது எப்போது முடியும் என்பதை அறிந்தவர் எவருமில்லை என, **'கடைநாள் இதுவென்று அறிந்தாரும் இல்லை'** (கலித்தொகை, பாடல் 12:15) இங்கே திருவள்ளுவரின் தத்துவமும் மணிமேகலையின் கருத்தும் சற்று ஒப்ப நோக்கத்தக்கது. அக்கருத்தானது பிறப்பும் இறப்பும் மனிதனுக்கு மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்துக்கும் பொதுவானது

என்பதை அறிந்து நாம் அறம் செய்து நிலைத்த புகழைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்**
**உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்**
**நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைதலும்,**
**அல்லறம் செய்வோர் அருநரகு அடைதலும்...** (மணிமேகலை, 16 : 86-89)

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு** (திருக்குறள் : 339)

வாழ்நாளின் கடைசிநாள் இதுவே என்று திட்டமாக உரைப்பவர் எவருமே இல்லை என்கிறது இவ்வரி.

**நாற்றஞ்சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்**
**கூற்றூழ்போற் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ**
(கலித்தொகை, பா. 17:11-12)

மலரும் அரும்பானது வாடி உதிர கூற்றமானது அவற்றின் வாழ்நாளைக் குறைத்துவிடுவது போன்றே, நாள் என்னும் காலமும் நம் உடலில் இருந்து உயிரை பிரிக்கும் கூற்றமாக மாறும் நிலையில்லாதது எனத் தெரிவிகின்றது மேற்சொன்ன அடிகள்.

**வளியினும் வரைநில்லா வாழும்நாள்** (கலித்தொகை, பா. 20: 9) வரையறைக் காட்டி காற்றை அடைத்து வைக்க இயலாது. அதுபோல நிலையில்லாத தன்மை உடையது வாழ்நாள் என்பதை எடுத்துக்கூறும் அருமையான வரியுடையது கலித்தொகையின் இப்பாடல்.

**கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கண்டுத் தேறார் விழியிலா மாந்தர்** (திருமந்திரம், பாடல்: 221)

கதிரவன் கிழக்கில் தோன்றி (பிறப்பு) மேற்கில் மறையும் (இறப்பு) வரையுள்ள இடைப்பட்ட கால அளவே மனிதனின் வாழ்நாள் என்கின்றார் திருமூலர்.

**முடிவுரை**

சிறுவித்தே பெருமரத்திற்கு ஆதாரம் என்பது போன்று, தனிமனித வளர்ச்சியே சமூதாய வளர்ச்சிக்கும்; மலர்ச்சிக்கும் வித்தாய் அமைகிறது. மனிதன் தன் அனுபவங்களை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்துகிறான். இன்றைய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் 60 ஆண்டுகளாக கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் நாம் வாழப்போகும் சில ஆண்டுகளாவது புல் நுனி மேல் உள்ள நீரைச் சுட்டி, அது விரைந்து மறைவது போன்று வாழ்வு நிலையில்லாததை உணர்ந்து அறம் செய்ய வேண்டுவதன் முக்கியத்துவத்தை நாலடியாரின் வழியும் பின்பற்றி, அறப்பொருளை உணர்ந்து, இன்பவாழ்க்கையை

வாழ **'அக இலக்கியத்தில் புற வாழ்வில்'** நாம் நீக்க வேண்டியவற்றையும், நிலையில்லாதவனவற்றையும் கூறும் கலித்தொகையைக் கற்று பயன்பெறுவோம்!

**துணைநூற்பட்டியல்**

[1] **இராமசுப்பிரமணியம் வ. த.** மணிமேகலை, பூம்புகார் பதிப்பகம், சென்னை - 08, 2010.

[2] **சுப்பிரமணியன் ச. வே.** தொல்காப்பியம் விளக்கவுரை, மெய்யப்பன்பதிப்பகம், சிதம்பரம், 2015.

[3] **சுப்பிரமணியன் ச. வே.** பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 08, 2017.

[4] **ஞானசம்பந்தன் அ. ச.** திருமந்திரம், கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

[5] **புலியூர்க்கேசிகன்**, கலித்தொகை, கங்கை புத்தக நிலையம், சென்னை - 17, 2010.

[6] **மெய்யப்பன். ச.** திருக்குறள் பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 08, 2017.

[7] **விசுவநாதன். அ.** கலித்தொகை. நீயூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 98, 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.